**வரையறுத்த திருகோணமலை மின்வலு கம்பனி - 2023/ 2024**

-------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 அபிப்பிராயம்

வரையறுத்த திருகோணமலை மின்வலு கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக்கூற்று, விரிவான வருமானக் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனி 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு தொடர்பில் நிட்சயமற்ற பொருண்மை

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவாக தொடருவதற்கு கம்பனிக்குள்ள ஆற்றல் தொடர்பான ஐயப்பாடு ஏற்படக் கூடுமென நிட்சயமற்றதன்மையை விளக்குகின்ற நிதிக்கூற்றுக்களின் 2.1.5 ஆம் குறிப்பு தொடர்பாக நான் கவனத்தை ஈர்க்கிறேன். இதன்படி கம்பனியானது திருகோணமலை மாவட்டத்தில் சம்பூரில் 50 MW சூரிய சக்தி மின்வலு பொறி (100 MW விரிவாக்க கூடியவாறு) விருத்தி செய்கின்ற நோக்கத்துடன் செயற்படுத்தப்பட்டது. நிலைபேறான மின்வலு அதிகாரசபையானது 2022 ஆகஸ்ட் 1 இல் 50 MW சூரிய சக்தி மின்வலு பொறி விருத்தி செய்வதற்காக பகுதியளவு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் 2022 செப்தெம்பர் 13 இல் மத்திய சுற்றாடல் அபிவிருத்தி அதிகாரசபையால் (CEA) நிபந்தனை குறிப்பு (TOR) வழங்கப்பட்டது. இதன்படி TORஇன் பிரகாரம் சுற்றாடல் மதிப்பாய்வு தாக்கத்தை (IEE) கற்கை மேற்கொள்வதற்கு ஆலோசனையாளர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் சுற்றாடல் கற்கைகள் மீதான வரைவு அறிக்கை CEA இற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இலங்கை மின்சார சபையுடன் (CEB) மின்வலு கொள்வனவு உடன்படிக்கையை இறுதியாக்குவதற்கு கலந்துரையாடல் செயற்பாட்டில் உள்ளன. ஆண்டிற்காக கம்பனியின் தொடர்ந்து நடைபெறுகின்ற நடவடிக்கைகளிற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 13,005,462 ஆகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.6. நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.6.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| **(அ)** 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகைக்கான வழிகாட்டலின் 2.3 ஆம் பிரிவு | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் பாதீட்டு திட்டத்துடன் சேர்த்து இறுதியாக்கப்பட்ட உபாயத் திட்டங்கள் தாய்க் கம்பனிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை எவ்வாறாயினும்,கம்பனியானது இந்த வேண்டுகையுடன் இணங்கத் தவறியிருந்தது. | முகாமைத்துவ கருத்துரை பெறப்பட்டிருக்கவில்லை. | அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான கூட்டு ஆளுகைக்கான வழிகாட்டலின் வேண்டுகையுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஆ) 2022 மார்ச் 11 ஆந் திகதிய இலங்கை மின்சார சபைக்கும் வரையறுத்த NTPC இற்கும் வரையறுத்த திருகோணமலை மின்வலுக் கம்பனிக்கும் இடையில் இணைந்த மற்றும பங்குதாரர் உடன்படிககை | | | |
| பிரிவு2.2.2 (அ), (ii) மற்றும் (iv) | சபைக் கூட்டம் குறைந்தது மாதத்தில் ஒரு தடவை நடைபெறுகின்றதென உறுதிப்படுத்துவதற்கு வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது மூன்று சபைக் கூட்டங்கள் மாததிரமே நடை பெற்றிருற்தது. மேலும், மேற்குறித்த செயற்திட்ட நோக்கங்களை விவாதித்த சபைக் கூட்ட குறிப்புகள் கணக்காய்விற்கு முன் வைக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் வேண்டுகையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்ககப்பட வேண்டும். |
| பிரிவு 11.6 | மார்ச், யூன், செப்தெம்பர் மற்றும் திசெம்பரின் கடைசி நாளிற்கு பின்னர் 30 நாட்களிற்குள் கம்பனியானது ஒவ்வொரு பணிப்பாளருக்கும் காலாண்டு நிதி மற்றும் | முகாமைத்துவ கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் வேண்டுகையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்ககப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயற்பாட்டு அறிக்கைகள், மற்றும் அறிக்கை திகதி முடிவடைந்து முந்திய மூன்று மாதங்களிற்காக பாதீட்டிற்கு எதிராக செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து பின்னரான தற்போதைய காலத்திற்காக அனுமதிக்கப்பட்ட பாதீட்டுடன் ஒப்பிடப்பட்டு அறிக்கை திகதியில் உள்ளவாறு நிதிப் பங்களிப்பு மற்றும் செலவினங்களின் தொகுப்பை மற்றும் சபை குறிப்பிடக்கூடிய அத்தகையவற்றிலிருந்து வழங்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியானது மேற்குறித்த வேண்டுகையுடன் இணங்கியிருக்கவில்லை. | | |
| (இ) | அரச உடமையாக்கப்பட்ட முயற்சிகளிற்கான செயற்பாட்டு கைநூலின் (SOEs)2021 நவம்பரில் வழங்கப்பட்ட 01/2021 ஆம் இலக்கPED சுற்றறிக்கையின் 6.7 ஆம் பிரிவு | 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு ரூபா 47,869,038 ஆன (முற்கொண்டு வரப்படும் தொகை) ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு கணிப்பீட்டு சபை கம்பனியால் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கணிப்பீட்டு சபை தொடர் வழி எல்லை மற்றும் ROU சொத்து (குத்தகை காணி) கொண்டுள்ள சொத்தின் முற்கொண்டு வரப்படும் மொத்த பெறுமதியின் ரூபா 47.5 மில்லியன் பெரும்பாண்மையாக 2024.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கணிப்பீட்டுச் சபை ஊடாக ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் உள்ளதன்மையை மெய்மையாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1. நிதிசார் மீளாய்வு**

மீளாய்வாணடின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11 மில்லியன் நட்டமாக உள்ளதுடன் நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 9.1 மில்லியனாக இருந்தது. ஆகவே, நிதிசார் விளைவுகளில் ரூபா 1.9 மில்லியன் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. நிதி வருமானத்தில் வீழ்ச்சியே இந்த வீழ்ச்சிக்கான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1. முகாமைத்துவ திறமையீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியானது 2023 யூலை 17 இல் மின்நிலைய புதுப்பிக்கக்கூடிய மின்வலு செயற்திட்டத்தில் ஈடுபடுதற்காக மற்றும் செயற்படுவதற்காக அனுமதி பெறுவதற்கு ரூபா 57.5 மில்லியன் தொகை செலுத்தியிருந்தது. அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் செயற்திட்டமானது இந்த அனுமதி பத்திரம் வழங்கிய திகதியின் (2023 யூலை 18) ஒரு ஆண்டிற்குள் அதன் வர்த்தக செயற்பாடுகளை தொடங்க வேண்டியதுடன் அத்தகைய காலப்பகுதிக்குள் வர்த்தக செயற்பாடுகளை தொடங்குவதற்கு தவறியிருந்தது. இலங்கை நிலைபேறான மின்வலு அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் இந்த அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்வதற்கு அதிகாரத்தை கொண்டுள்ளார். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் வர்த்தகச் செயற்பாடுகள் இன்னமும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. | TPCL ஆனது 50 MW புதுப்பிக்கக்கூடிய மின்வலு செயற்திட்டத்திற்காக SLSEA இடமிருந்து மின்சக்தி அனுமதித் பத்திரத்தினை ஒரு ஆண்டு (அதாவது 2025.07.17 வரை) நீடிப்பை பெற்றிருந்தது. | அனுமதிப் பத்திரம் காலவதியாவதற்கு முன்னர் அதன் வர்த்தக செயற்பாடுகளை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் இலங்கை நிலைபேறான மின்வலு அதிகாரசபைக்கு செயற்திட்டத்தின் அடையதலை எல்லைகற்களை குறிக்கின்ற முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எவ்வாறாயினும் செயற்திட்ட உடன்படிக்கை இன்னமும் கைசாத்திடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட முன்னேற்ற அறிக்கை இலங்கையில் CEB உடன் செயற்திட்ட உடன்படிக்கை கைசாத்திட்ட பின்னர் TPCL ஆல் SLSEA உடன் பகிர்ந்திருக்க முடியும். | இந்த விடயம் தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல் தொடங்கப்பட வேண்டும். |
| (இ) | மன்றத்தின் உறுப்புரையின் பிரகாரம் திருகோணமலையில் சம்பூரில் 50 MW சூரிய சக்தி மின்பொறியை அபிவிருத்தி, நிர்மாணம், தாபிப்பு, செயற்பாடு மற்றும் பராமரிப்பதே கம்பனியின் நோக்கம் நோக்கமாக உள்ளதுடன் 50 MW சூரிய சக்தி PVசாத்திய வள அறிக்கை பிரகாரம் | செயற்திட்டமானது இலங்கையில் CEB உடன் செயற்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் உரிய காலத்தில் தொடங்கப்பட வேண்டும். வருடாந்த மின்வலு உருவாக்கல் மற்றும் வருடாந்த $CO_2$ குறைப்பின் நோக்கம் | செயற்திட்டத்தை தாமதமில்லாமல் தொடங்குவதற்கும் செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைவதங்கும் அவசியமான நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| ஆண்டு ஒன்றிற்கு 91,434 தொன் வருடாந்த $CO_2$ குறைப்புடன் அண்ணளவாக 124.4 மில்லயன் அலகுகள் (MU) உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செற்திட்ட அமுலாக்கல் தாமதம் காரணமாக வருடாந்த மின்வலு உருவாக்கல் மற்றும் வருடாந்த $CO_2$ குறைப்பின் நோக்கம் எதிர்பார்க்கப்பட்டவாறு அடையப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட காலத்தின் போது அடையப்படும். | எடுக்கப்பட வேண்டும். |

### 3.2. செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கம்பனயானது சம்பூரில் 50 MW சூரிய சக்தி மின்வலுப் பெறியயை தாபிப்பதற்கு 2018 ஆம் ஆண்டில் அமைச்சரவை அனுமதி பெற்றிருந்தது. எவ்வாறாயனும், சொல்லப்பட்ட மின்பொறியின் செயற்பாடுகள் 2024 மார்ச் 31 வரை தொடங்கப்பட்டிருக்கவில்லை. கம்பனியால் எவ்வித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்காத போதிலும் மீளாய்வாண்டிற்காக நிர்வாக செலவினங்களில் ரூபா 11.2 மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. மேலும்,2024 மார்ச் 31 இல் உள்ளவாறான கம்பனியின் திரண்ட நிறுத்தி வைத்த நட்டம் ரூபா 635.2 மில்லியனாக இருந்தது. | 2018 ஆம் ஆண்டில் அமைச்சரவை அனுமதி பெற்றிருந்த போதிலும் கம்னியின் முன்வைக்கப்பட்ட வழியில் பங்குதாரர்களிற்கிடையில் (CEB மற்றும் NTPC) தொடர் கலந்துரையாடல் இடம்பெற்றது. நீங்கள் சபை குறிப்புகளை மீளாய்வு செய்ய முடியும் மற்றும் நாங்கள் 50 MW சூரிய மின்வலு செயற்திட்டம் தொடர்பில் விவாதித்திருந்தோம். எவ்வாறாயினும், எண்கணித காரணங்களால் செலுத்த வேண்டியவை நீண்டகாலம் எடுத்திருந்தது என நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். பங்குதாரர் வேண்டுகையுடன் கம்பனி செயற்பாடுகளை வைத்திருப்பதற்கு ஒரு ஆண்டிற்காக ஏற்பட்டிருந்த 2023/24 இல் ரூபா 11.2 மில்லியன் நட்டம் செயற்பாட்டு செலவினத்தின் ஆகக் குறைந்த தொகைக்கு செலுத்த வேண்டியதாக உள்ளது. | மின்வலும் உருவாக்குவதன் மூலம் வருமானம் உருவாக்கும் நோக்கத்திற்காக தாமதம் இல்லாமல் செயற்திட்டத்தை தொடங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பும் நல்லாளுகையும்

### 4.1. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சகல அரச நிறுவனங்களுக்குமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மீதான ஐக்கிய நாடுகளின் "2030 நிகழ்ச்சி நிரலிற்கு அமைய இலக்குகளி மற்றும் அதன் நோக்கெல்லின் கீழான செயற்பாடுகளின் அமுலாக்கலில் பங்களிப்பு செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் | செயற்திட்ட உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்னர் பொருத்தமான அபிவிருத்தி இலக்குகள், அடைய வேண்டிய இலக்குகள் மற்றும் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக பொருத்தமான | கம்பனியானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மீதான ஐக்கிய நாடுகளின் "2030 நிகழ்ச்சி நிரலிற்கு அமைய இணங்க |

கம்பனியானது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் நோக்குகள் அடையப்பட வேண்டியதுடன் அதேபோல முன்னேற்றத்தை அளவிடுவதற்காக பொருத்தமான குறிகாட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

குறிகாட்டிகள் என்பவற்றினை வேண்டும்.
TPCLகற்பனையாக
இனங்கண்டிருந்தது.